1987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 82/1986) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(இ). எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

** 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.